சுருக்கம்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை – 2011, 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 வரையிலான ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பதிவை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை

அரசாணை (டி) எண்.612

நாள் : 25.10.2018
விளம்பி ஐப்பசி 8
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்கவும்:-

1. அரசாணை (டி) எண்.500, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை, நாள் 22.08.2017.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கடித எண்.பப1/8211/2018, நாள் 01.10.2018.

*****

ஆணை:–

மேலே 1–ல் படிக்கப்பட்ட ஆணையில், 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015–ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பதிவை புதுப்பிக்க தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை, 2011, 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016–ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்கலாம் என அரசுக்கு பரிந்துரை அனுப்பியுள்ளார்.

3) மேற்கண்ட கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகங்களில் 2011, 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016–ஆம் ஆண்டுகளில் 01.01.2011 முதல் 31.12.2016 வரை வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, சிறப்பு புதுப்பித்தல் சலுகையை வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

(i) இச்சலுகையைப் பெற விரும்பும் நபர்கள், அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆன்லைன் மூலம் தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

(ii) இச்சலுகை ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

(iii) மூன்று மாதங்களுக்குப்பின் பெறப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

(iv) 1.1.2011க்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4) மேலே கண்ட இவ்வாணை பற்றிய விவரங்களை இரண்டு முன்னிலை தமிழ் நாளிதழ்களில் வெளியிடுவதுடன், அனைத்து வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் உள்ள தகவல் பலகையில் (Notice Board in all Employment Exchanges) பொது மக்களின் தகவலுக்காக வைக்க வேண்டும் என அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், கிண்டி,
சென்னை–600 032.
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை – 600 009.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து துறை முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள் தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை–600 009.
கணிணிப் பிரிவு பொறுப்பாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை 600 009.
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை– 600 009.
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/10/18

பிரிவு அலுவலர்.

25.10.18